# இராமேஸ்வர வழிபாடுகள்

**வே.பரந்தாமன் மற்றும்அ.பிரேம்குமார்**
**ரீச் பவுண்டேஷன், சென்னை**



தமிழகத்தில் கோயில் திருவிழாக்கள் வருடத்திற்கு ஒருமுறை, மாதம், வாரம், நாள் தோறும் என்று பலவகையான விழாக்கள் நடைபெறுகின்றன. சங்க கால தமிழர்களின் வழிபாடுகளும் வழிபடும் தெய்வங்களைப் பற்றியும் மிகத்தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. தொல்காப்பியம் காலந்தொட்டு சங்க இலக்கியங்களில் வேதம், யாகம், இறைவழிபாடு, தெய்வம், கடவுள், வெறியாடல், கந்தழி, இறைவன், அயர்தல்-வழிபடுதல், ஆதிரையான்-சிவபெருமான், மாயோந்திருமால் என்றும் கூறப்பட்டுள்ளது.

“வழிபடு தெய்வம் நிற்புறங்காப்ப
பழிநீர் செல்வமொடு வழிவழி சிறந்து
மொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே”............ (தொல்)
கோயில்கள் கரக்கோயில், மாடக்கோயில், பூங்கோயில் .......ஆகியவையாகும்.

அந்தவகையில் இராமேஸ்வரம் பூங்கோயில் வகையைச் சேர்ந்ததாகும். கோயில் திருவிழாக்கள் கிராமக்கோயில் திருவிழா, சைவ வைணவக் கோயில் விழாக்கள் என நடைபெறுகின்றன. இராமேஸ்வரத்தில் திருவிழாக்கள் இரண்டு வகையிலும் நடைபெறுகின்றன.

## கிராமக்கோயில் திருவிழாக்கள்

இப்பகுதியில் சித்திரை மாதத்தில் கிராமத் திருவிழாக்கள் ஆரம்பித்து ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு பரிவார தேவதைகளுக்கும் நடைபெறும். இங்கு காளியம்மன், மாரியம்மன், துர்கை, ஐய்யனார், முனீஸ்வரர், பர்வதவர்த்தினியம்மன், நம்புநாயகியம்மன் போன்ற தெய்வங்கள் உள்ளன. இவற்றில் ஆடி, ஆவணி, புரட்டாசி மாதங்களில் அம்மன் கோயில்களில் “முளைக்கொட்டு” அல்லது “முளைப்பாரி” திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இத்திருவிழா ஞாயிற்றுக்கிழமை காப்புக்கட்டுதலில் ஆரம்பித்து 8-ம் நாள் முளைப்பாரியை கடலில் கரைக்கும் வரை நடைபெறும். ஒவ்வொரு நாளும் இரவு கும்மிபாட்டு, ஒயிலாட்டம் ஆகியவை நடைபெறும். கருப்பசாமி, முனீஸ்வரன் போன்ற கோயில்களில் ஆடி, புரட்டாசி மாதங்களில் கிடாவெட்டு பூசை நடைபெறும். இவற்றில் பங்காளிகள் கும்பிடும் கோயில்களும் உண்டு, அதுபோல் ஒரு கிராமமே வழிபடும் கோயில்களும் உண்டு. நம்புநாயகி அம்மன் கோயிலில் மாசி மாதம் கொலு விழாவானது 8 நாட்கள் நடைபெறும்.

## இராமநாத சுவாமி கோயில் திருவிழாக்கள்

கோயில் விழாக்கள் அடிப்படையில் ஆகம விதிப்படி நடைபெறுகின்றன. ஒவ்வொரு விழாவிற்கும் ஒவ்வொரு ஆகமங்கள் உண்டு. அதுபோல் ஒவ்வொரு விழாக்களும் அந்தந்த மாத, நாட்களில்தான் நடைபெற வேண்டுமென்ற விதிமுறைகளும் உள்ளன. இக்கோயிலில் மிகமுக்கியமான மூன்று விழாக்கள் உண்டு. அவற்றில் ஆனி மாதம் (ஜெயஸ்தா), ஆடி மாதம் (ஆஸத) மற்றும் மாசி மாதம் (மகம்) போன்றவைகளாகும். வைகாசி மாதம் 10 நாட்கள் பௌர்ணமியன்று விசாக சுக்ல சஷ்டி தினத்தன்று நடைபெறும் வசந்தோட்சபவம் விழாவன்று இராமாநாதரும், அம்பாளும் மகாதேவத் தீர்த்த்தின் வடகரையில் வாசம் செய்வார்கள். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பர்வதவர்தினியம்மன் நவசக்தி மண்டபம் என்று அழைக்கப் பெறும் சுக்ரவார மண்டபத்தில் கொலுவிருப்பாள். அப்போது நான்கு வேதம், தேவாரப் பாடல், திருவாசகம் மற்றும் திருப்பால்லாண்டு போன்ற பாடல்களை பாடி, பலவிதமான இசைக்கருவிகளையும் வாசித்து வழிபாடு செய்வார்கள். முடிந்தவுடன் முதலில் பிராமணர்களுக்கும் பிறகு மற்றவர்களுக்கும் விபூதிப் பிரசாதம் வழங்கப்படும். அன்று இரவு அம்மன் மண்டபத்தில் நாட்டிய விழாவும் நடைபெறும்.


தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெற்று வருகின்றன, அதிகாலை 4 - 5 மணியளவில் திருவானந்தாள் பூஜையானது படிகலிங்கத்திற்கு, இராமநாதசுவாமி கோயிலின் கருவறையில் பாலாபிசேகம் நடைபெறும். சூர்ய உதயதிற்குப் பிறகு உதையமார்த்தாண்ட பூஜையானது 9 மணியளவில் நடைபெறும். ஜாமம் பூஜை (உதைய காலம் அல்லது காலசந்தி). உச்சிகால பூஜை 12 - 1, சாயரக்ஷா பூஜை 3 - 4, அர்த்தஜாம பூஜையானது இரவு 9 மணியளவில் நடைபெறும்.

இதைத்தவிர இக்கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் விழாக்களும் உண்டு. மகாசிவராத்திரியன்று 10 நாட்கள் மாசி மாதத்தில் மேக சஷ்டி கிர்ஷ்ணா தினத்தில் ஆரம்பித்து மேக க்ர்ஷ்ண புதுநிலவு முடிய நடைபெறும். விழாவில் ரிஷ்ப வாகன சேவையும், மகாசிவராத்திரி அபிஷேகமும், வெள்ளிரத வீதியுலாவும் நடைபெறும்.

### ப்ரதிஷ்ட்டாங்க உத்சவம்

ஜெயஷ்ட சுக்ல சுத்த தினத்தன்று ஜெயஷ்ட்ட ஆரம்பித்து முழுநிலவு முடிய 10 நாட்கள் நடைபெறும். அன்று அன்னலும், அம்பாளும் ரிஷபவாகன சேவையும், தேர்பவனியும் நடைபெறும். திருக்கல்யாண உத்சவமானது ஆடிமாதம் ஆஷத பக்குள கிருஷ்ண அஷ்டமி தினத்தில், பரணி நட்சத்திரத்தில் ஆரம்பித்து 17 நாட்கள் நடபெறும் இவ்விழா சரவண சுத்த சுக்ல தசமியன்று முடியும். இவ்விழாவில், ரிஷ்பவாகன சேவை, வெள்ளிரத வீதியுலா, தபசு நாள், சயனசேவை மற்றும் திருக்கல்யாணம் போன்றவைகள் நடைபெறும்.

## சேது வழிபாடு



வால்மீகி இராமாயணத்தில்

ஸேதுபந்த இதி க்யாத்: த்ரைலோக்யேந ச பூஜிதம்
ஏதத் பவித்ரம் பரமம் மஹாபாதக நாஸநம்//
அத்ர பூர்வம் மஹாதேவ : ப்ரஸாம் அகரோத் ப்ரபு:

என்று கூறப்படுகிறது.

இந்து சமய வழிபாட்டின் மீது நம்பிக்கை கொண்ட ஒவ்வொருவரும் சேது யாத்திரை வழிபாட்டை வாழ்வியல் கடமையாகக் கொண்டுள்ளனர். தர்மம், அதர்மம், காமம், மோட்சம் என எதை நினைத்து தீர்த்தமாடுகிறானோ அதை நிச்சயம் அடைவான். இராம தனுஷ்கோடியில் ஒருதடவை ஸ்நானம் பண்ணுகிறவன் அசுவமேத யாகப் பலனையும், துலா தான பலனையும், ஆயிரம் கோதான பலனையும் அடைவான். மன சுத்தியுடன் பஞ்ச மாபாதகங்களைப் புரிந்தவன் சேதுவில் ஸ்நானம் செய்தால் பவித்திரனாகி தர்ம புத்தியுடன் வாழ்வான். சேதுவின் வழிபாடு செய்யப்பட்ட நீரும், யாகமும் செய்த தவமும் முழுமையாக பலன் தரக்கூடியதாகும். எவன் ஒருவன் சேதுவில் பிராய்சித்த தர்பன பூஜை பண்ணுகிறானோ அவன் செய்த பாவம் நிவர்த்தியாகிறது.

ஆனந்த இராமாயணத்தில்

சேதுமாரபா மானஸ்து விக்நேசம் ஸப்தாப்ய ராகவ:
நவக்ரஹானாம் பூஜார்த்தம் வாஷானாந்தவ ஸாதராத்/
நளஹஸ்தே ஸம்ஸ்தாப்ய பூர்வம் தத்ரமஹேத்தௌ
தத: ஸாகரஸம்யோகே த்வநாம்நா லிங்கமுத்தமம்//
ஸதாபயாமீதி நிச்சித்ய மாருதிம் வாக்ய மப்ரவீத்.

இராமபிரான் வானரசேனையுடன் கடலில் சேதுவை அமைப்பதற்கு முன்னர் கடற்கரையில் மகாதேவரை வழிபட்டு தமது முயற்சி சிறக்க வேண்டிக்கொண்டார் என சேதுவைப் பற்றிய சிறப்பு கூறப்படுகிறது.

